விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 26 புதன் 11.08.2021 மலர் - 2, இதழ் - 127

# ஏ.பி.வி.பி. கொண்டாட்டம்


விஜயபாரதம்

அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் (ஏ.பி.வி.பி) மாணவர் அமைப்பு, பாரதம் சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் நிறைவடைவதைக் கொண்டாடும் வகையில், ஆண்டு முழுவதும் அதனை தேசமெங்கும் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, தேசத்தில் 1,28,335 இடங்களில் தேசியக்கொடிகள் ஏற்றப்படும். மேலும், ஆண்டு முழுவதும் இன்டர்ன்ஷிப், மூவர்ணக்கொடி அணிவகுப்பு, சமூக ஊடக பிரச்சாரங்கள், மக்களால் மறக்கப்பட்ட சுதந்திர போராட்ட வீரர்கள் பற்றிய குறும்படங்கள் தயாரிப்பு போன்ற பல நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. தேசம் முழுவதும் உள்ள இளைஞர்கள், இந்த ஆண்டு முழுவதும் சுதந்திர கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவும், மறக்கப்பட்ட நமது சுதந்திர போராட்ட கதாநாயகர்களை நினைவுகூரவும் வேண்டுகோள் விடுத்துள்ளோம் என ஏ.பி.வி.பி தேசிய பொதுச் செயலாளர் நிதி திரிபாதி தெரிவித்தார்.

# குறி வைக்கப்படும் ஹிந்து கோயில்கள்


விஜயபாரதம்

தூத்துக்குடி ஜெயராஜ் ரோட்டில் முச்சந்தி இசக்கியம்மன், சுடலை ஆண்டவர் கோயில்கள் பல ஆண்டுகளாக வழிபாட்டில் இருந்தது. தூத்துக்குடி மாநகராட்சியில் நடக்கும் ஸ்மார்ட் சிட்டி பணிகளுக்கு இடையூறாக இருப்பதாகக் கூறி மாநகராட்சியினர் காவல்துறையின் பாதுகாப்புடன் அக்கோயில்களை இடித்துத் தள்ளினர். ஏற்கனவே இக்கோயில்களை இடிக்கக்கூடாது என பா.ஜ.கவினர், ஹிந்துமுன்னணியினர் உள்ளிட்ட பல ஹிந்து அமைப்பினர் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால், அவற்றை காதில் வாங்கிக்கொள்ளாமல் தி.மு.க தலைமையிலான தமிழக அரசு ஹிந்து வழிபாட்டுத்தலங்களை இடிப்பதில் மட்டுமே மும்முரம் காட்டுகிறது. தூத்துக்குடியில் ஆக்கிரமிப்பில் இருப்பதாக மாநகராட்சி அளவீடு செய்த இடங்களில் முறைகேடாக பல ஆக்கிரமிப்புகள் உள்ளன. ஆனால் அவற்றை எல்லாம் விட்டுவிட்டு ஸ்மார்ட் சிட்டி என்ற பெயரில் ஹிந்து கோயில்கள் மட்டும் குறிவைக்கப்படுகின்றன என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

# வீடுகளில் விலங்குகள் வளர்த்தால் வரி



விஜயபாரதம்

மதுரை மாநகராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி, இனி வீடுகளில் நாய், மாடு, ஆடு, குதிரை வளர்த்தால் அதற்கு மாநகராட்சிக்கு ஆண்டுக்கு ரூ.10 வரி செலுத்த வேண்டும். வளர்ப்பு பிராணிகளை மாநகராட்சியில் பதிவு செய்ய வேண்டும். வரி செலுத்தாதவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும். மாடு, ஆடு, குதிரைகளை சாலைகளில் விட்டால் ரூ. 1,000 அபராதம் விதிக்கப்பட்டு, தினமும் அதன் பராமரிப்புக்கு ரூ. 100 வசூலிக்கப்படும். சாலைகளில் வீட்டு நாய்கள் மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தினால் ரூ. 500 அபராதம் விதிக்கப்படும். இறைச்சி, மீன் கடைகளை ஒழுங்குப்படுத்த மாநகராட்சி உரிமம் வழங்கப்படும், அதற்கு சதுர அடிக்கு ரூ. 10 வசூலிக்கப்படும், சாலைகளில் மீன் இறைச்சி வியாபாரம் செய்ய தடை, கழிவு நீர் வாய்க்கால்களில் இறைச்சி கழிவுகளை கொட்டினால் ரூ.2 ஆயிரம் அபராதம் விதிப்பது என முடிவு செய்யப்பட்டு உள்ளது. இது தொடர்பாக ஏதும் ஆட்சேபனைகள் இருந்தால் மாநகராட்சி நகர் நல அலுவலருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---



விஜயபாரதம்

# தி.மு.க. பிரமுகர் வீட்டில் ரெய்டு

அரிய வகை கடல் அட்டை, கடல் குதிரை போன்ற கடல்வாழ் உயிரினங்களை வெளிநாட்டிற்குக் கடத்திய வழக்கில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு ராமேஸ்வரத்தை சேர்ந்த வில்லாயுதம் என்பவர் கைது செய்யப்பட்டார். இவர் தி.மு.கவின் மீனவர் அணி செயலாளராக உள்ளார். இந்நிலையில் சமீபத்தில் ராமேஸ்வரத்தில் உள்ள அவருடைய வீடு, தங்கும் விடுதி, அலுவலகம், தொழிற்சாலை உள்ளிட்ட இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் பல மணி நேரம் சோதனை நடத்தினர். இரவுவரை நீடித்த சோதனையில் கோடிக்கணக்கான மதிப்புள்ள பல்வேறு முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

---



விஜயபாரதம்

# லஞ்ச ஒழிப்பு சோதனை

அ.தி.மு.க ஆட்சியின்போது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர் எஸ்.பி.வேலுமணி. அவர் மீது சாட்டப்பட்ட சொத்து சேர்ப்பு, முறைகேடு புகார்களை அடுத்து வேலுமணிக்கு தொடர்புடைய 52 இடங்களில் லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் நேற்று சோதனை நடத்தினர். இது பழிவாங்கும் நடவடிக்கை எனகூறி அ.தி.மு.க இதற்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

# செந்தில் பாலாஜிக்கு சம்மன்



விஜயபாரதம்

அ.தி.மு.க ஆட்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த காலத்தில், போக்குவரத் துறையில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்டார் செந்தில் பாலாஜி. இது தொடர்பாக அவர் மீது 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. பின்னர் இவர் தி.மு.கவில் இணைந்து மின்சாரத்துறை அமைச்சராக பதவி ஏற்றார். இதனையடுத்து பணம் திருப்பித் தந்ததாகக்கூறி அதில் ஒரு வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. மேலும் அவர் மீது உள்ள 2 பண மோசடி வழக்குகளை விசாரிக்க, அமலாக்கத்துறை சட்டவிரோத பணபரிமாற்ற சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளது. இது குறித்து விசாரிக்க செந்தில் பாலாஜி வரும் 11ம் தேதி மதுரையில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராகும்படி அவருக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

# அவலாஞ்சி அணை மேம்பாடு

ஜல்சக்தித்துறை அமைச்சரான கஜேந்திர சிங் ஷெகாவத், தனது டுவிட்டர் பதிவில், 'தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள அவலாஞ்சி அணை, நீர் கசிவு மற்றும் பலவீனமான பாதுகாப்பு போன்ற பல உள்கட்டமைப்பு சிக்கல்களை சந்தித்து வந்தது. ஜல்சக்தி அமைச்சகம், இதற்காக டிரிப் (DRIP) என்ற தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அணையின் தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தி புதுப்பிக்க வெற்றிகரமாக உதவியது' என தெரிவித்துள்ளார்.



விஜயபாரதம்

# முரண்பாட்டின் மொத்த உருவம்



விஜயபாரதம்

கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்வது குறித்து இந்த ஆண்டு ஜனவரியில் மக்களிடம் தேவையற்ற பயத்தை பரப்பிய காங்கிரஸ் கட்சி, தற்போது தடுப்பூசி செயல்முறையை அரசாங்கம் துரிதப்படுத்தவில்லை என்று குற்றம் சாட்டுகிறது. அதே போல, மற்ற நாடுகளில் அவதிப்படும் ஹிந்து, சீக்கிய சிறுபான்மையினருக்கு பாரதத்தில் குடியுரிமைத் தந்து காக்க பா.ஜ.க அரசு கொண்டுவந்த சி.ஏ.ஏ சட்டத்தை எதிர்த்தது காங்கிரசும் அதன் கூட்டணியில் உள்ள தி.மு.க, வி.சி.க உள்ளிட்ட கட்சிகளும். ஆனால், அதே காங்கிரஸ் தற்போது, ஆப்கானிஸ்தானில் உள்ள ஹிந்து, சீக்கியர்களை அங்கிருந்து வெளியேற்றி அழைத்துவர கோரிக்கை வைத்துள்ளது. காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஜெயவீர் ஷெர்கில், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரிடம் இக்கோரிக்கையை வைத்துள்ளார். இவர் சி.ஏ.ஏ சட்டத்தை மிகக் கடுமையாக எதிர்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாரதத்திற்கு ஆஸ்திரேலியா புகழாரம்



விஜயபாரதம்

ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் டோனி அபோட் சமீபத்தில் எழுதிய கட்டுரையில், 'பாரதம் மட்டும்தான் சீனாவுக்கு மாற்றாக இருக்க முடியும். சீனா பற்றிய ஒவ்வொரு கேள்விக்கும் பாரதமே பதிலாக உள்ளது. உலகின் பிற வளர்ந்து வரும் வல்லரசு நாளுக்கு நாள் போர்க்குணம் மிக்கதாக மாறிக்கொண்டிருக்கும் நிலையில், உலகில் உள்ள அனைவருடைய நலன்களுக்காக பாடுபடும் பாரதம், விரைவில் வல்லரசு நாடுகளின் மத்தியில் தகுந்த இடத்தைப் பிடிக்கும்.

சீனாவை குறித்த என்னுடைய முந்தைய அனுமானங்கள் தவறாகிவிட்டன. சீனா வர்த்தகத்தைகூட ஒரு ஆயுதமாக பயன்படுத்துகிறது. மேற்கத்திய நாடுகளின் நல்லெண்ணம், ஆக்கபூர்வ சிந்தனையைப் பயன்படுத்தி அவர்களின் தொழில்நுட்பத்தையே சீனா திருடுகிறது. இறுதியில் அவர்களின் வியாபாரத்தையும் தொழில்களையும் அழிக்கிறது. முந்தைய சோவியத் யூனியனை விட சீனா தற்போது சக்திவாய்ந்ததாக மாறியுள்ளது.

ஆஸ்திரேலியாவுடனான இருதரப்பு உறவுகளை பிரதமர் மோடி சிறப்பாக மேம்படுத்தியுள்ளார். பாரதம், சீனாவைப் போல் பணக்கார நாடாக இல்லாவிட்டாலும், அங்கு தற்போது நடைபெறும் சட்டத்தின் ஆட்சி, ஜனநாயக மாண்பு, உலகின் இரண்டாவது பெரிய எஃகு, மருந்து உற்பத்தித் திறன், கணினி மென்பொருட்கள் உற்பத்தி திறமை போன்றவை, உலகளவில் சீனாவுக்கு மாற்றாக பாரதம் விளங்கும் என்பதையே காட்டுகிறது. உலகமே சீனாவின் இறக்குமதியைச் சார்ந்துள்ளது என்ற ஆபத்தை கொரோனா பெருந்தொற்று நமக்கு உணர்த்தியுள்ளது. பாரதமும் ஆஸ்திரேலியாவும் சிறந்த கூட்டாளிகளாக விளங்கும்' என தெரிவித்தார்.

# ஸ்டீபன் மீது பாலியல் வழக்கு



விஜயபாரதம்

பாரதத்தாய், பூமித்தாய், பிரதமர், உள்துறை அமைச்சர், தமிழக முதல்வர் மற்றும் பா.ஜ.க சட்ட மன்ற உறுப்பினர்களை அவதூறாக பேசிய பாதிரியார் ஜார்ஜ் பொன்னையாவுடன் கைது செய்யப்பட்டவர் கிறிஸ்தவ இயக்கச் செயலாளர் ஸ்டீபன். இவர் மீது ஒரு பெண் பாலியல் வன்கொடுமை புகார் அளித்துள்ளார். இதனையடுத்து, கிறிஸ்தவ இயக்கச் செயலாளர் ஸ்டீபன், செட்டிசார்விளையைச் சேர்ந்த திருவட்டாறு ஒன்றிய தி.மு.க செயலாளர் ஜான் பிரைட், காட்டாத்துறையைச் சேர்ந்த ஹென்சிலின் ஜோசப் உட்பட 8 பேர் மீது பாலியல் வன்கொடுமை, கொலை மிரட்டல் உட்பட 6 பிரிவுகளில் காவல்துரையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இவ்வழக்கில் தலைமறைவான தி.மு.க ஒன்றியச் செலாளர் உட்பட 7 பேரை பிடிக்க 2 தனிப்படை அமைக்கப்பட்டுள்ளன.

# இலவச டி.என்.பி.எஸ்.சி. வகுப்புகள்



அறம் ஐ.ஏ.எஸ் அகாடமி, டி.என்.பி.எஸ்.சி குரூப் I, II, II A, IV தேர்வுகளுக்கான இலவச ஆன்லைன் வகுப்புகளை நடத்துகிறது. மேலும் விவரங்களுக்கு +91 89397 56868 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# மோடியின் திட்டத்துக்கு வரவேற்பு



விஜயபாரதம்

ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் நடத்தும் கடற்படை சார்ந்த கூட்டத்தில் கலந்துகொண்ட பாரதப் பிரதமர் மோடி, இதில் கலந்துகொள்ளும் முதல் பாரதப் பிரதமர் என்ற பெயரை பெற்றார். சர்வதேச அளவில் உலக நாட்டு கப்பல் படைகள் ஒற்றுமை, பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அதில் பேசிய மோடி, கடற்பரப்பில் சர்வதேச சட்டங்களை மதித்து செயல்படுவது, இருநாட்டு எல்லைகள் இடையே கப்பல் படை ஒத்துழைப்பு, கப்பல் வாணிபம், கடல் வளங்களை பாதுகாத்தல், கடலில் ஏற்படும் இயற்கை பேரழிவுகளை அனைத்து நாட்டு கப்பற்படைகளும் ஒன்றிணைந்து தடுத்தல் உள்ளிட்ட 4 அம்ச திட்டங்களை எடுத்துரைத்தார். அவரின் இத்திட்டங்கள், ஐ.நா சபையில் அனைவரிடமும் சிறப்பான வரவேற்பினை பெற்றது.

# அண்ணா பல்கலை துணைவேந்தர்



விஜயபாரதம்

அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த சுரப்பாவின் பதவிக்காலம் ஏப்ரல் 11ல் முடிவடைந்தது. இதையடுத்து, புதிய துணைவேந்தரை தேர்வு செய்ய தேடல்குழு நியமிக்கப்பட்டது. இதனையடுத்து தற்போது, அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தராக ஆர். வேல்ராஜ் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவர் 3 ஆண்டுகளுக்கு துணை வேந்தராக இருப்பார் என கவர்னர் மாளிகை தெரிவித்துள்ளது. அண்ணா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக தற்போது வேல்ராஜ் பணிபுரிந்து வருகிறார். இவர் 33 ஆண்டுகள் பேராசிரியர் அனுபவம் கொண்டவர்.

# விவசாய உதவித்தொகை



விஜயபாரதம்

பிரதமர் கிசான் திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு 4 மாதங்களுக்கு ஒருமுறை ரூ.2ஆயிரம் வீதம் 3 தவணையாக ஆண்டுக்கு ரூ. 6 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்தது. அதன்படி, விவசாயிகளுக்கு இதுவரை ரூ. 1.38 லட்சம் கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 9வது தவணை நிதியை, பிரதமர் மோடி நேற்று காணொலி காட்சி வாயிலாக விடுவித்தார். மொத்தம் 9.75 கோடி விவசாய குடும்பங்களுக்கு சுமார் 19,500 கோடி ரூபாய் அவர்களது வங்கி கணக்கில் நேரடியாக பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

# முதல்வரின் சிறுபான்மை பாசம்



விஜயபாரதம்

முஸ்லிம்களின் வக்ஃப் வாரிய சொத்துகளை கணினி மயமாக்குதல், அவற்றை பாதுகாக்க காம்பௌண்ட் சுவர் அமைத்தல், காவலர்களை நியமித்தல், முஸ்லிம் மதத் தலைவர்களான இமாம்கள், மியூசின்கள், கிறிஸ்தவ போதகர்களுக்கு உரிய கௌரவம், உதவித் தொகை உள்ளிட்டவற்றை சரியான நேரத்தில் வழங்குவதற்கு ஆந்திர மாநில முதல்வர் ஒய்.எஸ் ஜெகன் மோகன் ரெட்டி உத்தரவிட்டுள்ளார். இது அங்கு பெரும் அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. பா.ஜ.க தலைவரும் மக்களவை உறுப்பினருமான ஜி.வி.எல் நரசிம்ம ராவ், 'வக்ஃப் வாரிய நிலங்களை காம்பவுண்ட் சுவர்களை அமைத்து பாதுகாக்க உத்தரவிட்டுள்ள ஜெகன் மோக ரெட்டி, அதனை ஹிந்துக்களின் கோயில்களுக்கு நடைமுறைப்படுத்தமாட்டாரா? " என கேட்டுள்ளார்.

# உலகின் பணக்கார கிராமம்

குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத்தில் உள்ள மதாபர் கிராமம், உலகிலேயே மிகவும் வசதி படைத்த கிராமமாகத் திகழ்கிறது. இங்கு மொத்தம் 7,600 வீடுகளும் 17 வங்கிகளும் உள்ளன. இங்குள்ள வங்கிகளில் மக்கள் போட்டுள்ள சேமிப்புத் தொகை ரூ. 5 ஆயிரம் கோடிக்கும் அதிகம். அங்கு தனி நபர் சேமிப்பு ரூ. 15 லட்சமாக உள்ளது. இந்த கிராமத்தில் பள்ளி, கல்லூரி, ஏரி, அணை, மருத்துவ மையம், கோயில், நவீன வசதிகளைக் கொண்ட கோசாலை உள்ளிட்ட அனைத்து வசதிகளும் உள்ளன. விவசாயம்தான் இக்கிராமத்தின் பிரதான தொழில். இங்கிருந்து வேளாண் பொருள்கள் மும்பை உள்ளிட்ட இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இங்கு உள்ளோரின் மகன், மகள்கள் என சுமார் 65 % பேர் பெரும்பாலும் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். அவர்கள் தங்கள் குடும்பத்தினருக்கு அங்கிருந்து பணம் அனுப்புகின்றனர். தங்கள் கிராமத்தில் சொந்தத் தொழிலும் செய்கின்றனர். இதனால், அக்கிராமம் இப்பெரும் வளர்ச்சியை பெற்றுள்ளது. 1968ல் லண்டனில் மதாபர் கிராம சங்கம் தொடங்கப்பட்டது. வெளிநாட்டில் வசிக்கும் இக்கிராம மக்களை ஒருங்கிணைக்கும் பணியை அச்சங்கம் செய்துவருகிறது.

விஜயபாரதம்






விஜயபாரதம்

# மிஸ்டு கால் கேஸ் இணைப்பு

மிஸ்டு கால் கொடுத்தால் புதிய சமையல் எரிவாயு சிலிண்டர் இணைப்பு வழங்கும் சேவையை இந்தியன் ஆயில் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, நாடெங்கிலும் உள்ள விருப்பமுள்ள வாடிக்கையாளர்கள் 84549 55555 என்ற எண்ணுக்கு மிஸ்டு கால் கொடுத்தால் புதிய சமையல் எரிவாயு இணைப்பு கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை தொடங்கி வைத்த இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தலைவர் எஸ்.எம். வைத்யா, மூத்த குடிமக்களுக்கும் ஊரகப் பகுதிகளைச் சார்ந்தவர்களுக்கும் இத்திட்டம் நன்மை பயக்கும் எனத் தெரிவித்தார். வாடிக்கையாளர்கள் தங்கள் வீட்டிலிருந்தே இரட்டை இணைப்பு பெறும் வசதியையும் வைத்யா தொடங்கி வைத்தார்.



விஜயபாரதம்

# கோயில் சிலைகள் சேதம்

ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளம் மாவட்டம் கரகவலசை கிராமத்திற்கு அருகில் உள்ள பத்மநாப சுவாமி கோயில் சிலைகள் கடந்த வாரம் சேதப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் சில நாட்களுக்கு முன்னரே நடந்த போதிலும் அது குறித்த செய்திகள் வெளியாகவில்லை. கடந்த ஞாயிறு அன்று சமூக வலைதளங்களில் இந்த செய்தி பரவியதையடுத்து வேறு வழியின்றி கோயில் பூஜாரி இது குறித்து காவல்துறையில் புகார் அளித்தார். பூஜாரி தினசரி பூஜைகளை மேற்கொள்ளச் சென்றபோது கோவில் வளாகத்தில் உள்ள சரஸ்வதி தேவி, மகிஷாசுரமர்தினி, வினாயகர் சிலைகள் சேதப்படுத்தப்பட்டு இருந்தன. எனினும் கோயிலில் இருந்து விலை மதிப்புமிக்க பொருட்கள் எதுவும் காணாமல் போகவில்லை. இது குறித்து கோயில் நிர்வாகக்குழுவினரிடம் ஏற்கனவே புகார் அளித்தபோதும் அவர்கள் அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த ஜனவரியில் சி.சி.டி.விக்களை நிறுவ மாநில அரசு உத்தரவிட்டுள்ள போதிலும் தற்போதுவரை கோயிலில் எந்த சி.சி.டி.விக்கள் நிறுவப்படவில்லை என தெரிவித்தார். ஸ்ரீகாகுளம் காவல்துறை கண்காணிப்பாளர் அமித் பர்தார்,தலைமையில் காவல்துரையினர் அங்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். மலை உச்சியில் அமைந்துள்ள இக்கோயிலுக்கு வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே சங்கராந்தி சமயத்தில் பக்தர்கள் வருகை தருகின்றனர். மற்ற நாட்களில், பூஜைகளுக்காக பூஜாரி மட்டுமே கோயிலைத் திறக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



விஜயபாரதம்

# லடாக்கில் கருட் கமாண்டோ

பாரத விமானப்படையின் 'கருட் கமாண்டோ' என அழைக்கப்படும் விஷேஷ பயிற்சிப் பெற்ற அதிரடிப்படையினர் பாரத சீன எல்லைப்பகுதியான லடாக்கில் களமிறக்கப்பட்டு உள்ளனர். கிழக்கு லடாக்கின் நியோமாவில் அட்வான்ஸ்ட் லேண்டிங் கிரவுண்ட் (ALG)ல் கருட் கமாண்டோ வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் அப்பகுதியில் அப்பாச்சி, சின்னூக் மற்றும் டி90 டேங்குகளுடன் இணைந்து பயிற்சிளை மேற்கொண்டனர். போர் விமான தளங்கள் பாதுகாப்பு, வான் வழியாக அதிரடி நடவடிக்கைகள், ரகசிய அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது இவர்களின் பிரதான பணிகளில் ஒன்று.

---

# சமூக ஊடகத்தின் சுயரூபம்

விஜயபாரதம்

டிஸ் இன்ஃபோ ஆய்வகம் என்ற அமைப்பு, காஷ்மிர் பிரச்சனையில் பாகிஸ்தான் பங்கு, மேற்கத்திய நாடுகளில் காஷ்மீர் பற்றிய தவறான பிரச்சாரத்தை பாகிஸ்தான் ஆதரவு அமைப்புகள் எவ்வாறு பரப்புகின்றன, காஷ்மீரில் பிரச்சனையை அவை எப்படி எல்லாம் தூண்டுகின்றன, அதனால் பாகிஸ்தான் எப்படி ஆதாயம் அடைகிறது என்பதை கடந்த ஆகஸ்ட் 3ல், "காஷ்மீர் இன்க்: ஒரு மோதல் தொழில்" (Kashmir Inc: A Conflict Industry) என்ற தலைப்பில் வெளியிட்டது. அதனை வெளியிட்ட சில நாட்களுக்குப் பிறகு, அந்த அமைப்பின் நீல நிற டிக் (சரிபார்ப்பு நிலை) அந்தஸ்தை டுவிட்டர் நிறுவனம் நீக்கியது. மேலும், அந்நிறுவனத்தின் இணையதளத்தில் 24 மணி நேரத்தில் 40,000 சைபர் தாக்குதல்கள் நடைபெற்றது. பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் ஆலோசனைக்குழு உறுப்பினர் அர்ஸ்லான் காலித், டிஸ் இன்ஃபோ ஆய்வகத்தை தாக்கிக் கருத்துப் பதிவிட்டார். இவை அனைத்தும் எதேச்சையாக நடைபெற்றதாகத் தெரியவில்லை, இவற்றின் மூலப்புள்ளி ஒன்றுதான் என நெட்டிசன்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

---

# காலநிலை மாற்றம் ஐ.நா. கவலை

காலநிலை மாற்றங்கள் எதிர்காலத்தில் எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்த ஆய்வு அறிக்கையை, ஐ.நா. காலநிலை அறிவியல் குழு வெளியிட்டுள்ளது. இதன்மீது நடந்த இரண்டு வார இணைய வழி விவாதத்திற்கு பிறகு, இக்குழு, காலநிலை மாற்றம் குறித்து விரிவான அறிக்கையை தாக்கல் செய்ய 195 நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன. இக்குழு கடந்த காலம், எதிர்கால காலநிலை மாற்றம் குறித்த புள்ளிவிவரங்களை ஆராய்ந்து அறிக்கை தாக்கல் செய்யவுள்ளது. இவ்வருடம் பாரதம், சீனா, வட ஐரோப்பா ஆகிய நாடுகளில் பெரு வெள்ளம் உருவாகியது. அதேசமயம், வட அமெரிக்கா, கனடா, தெற்கு ஐரோப்பா உள்ளிட்ட இடங்களில் வரலாறு காணாத வெப்ப அலைகள் ஏற்பட்டது. உலகின் தட்பவெப்பநிலை அதிகரித்ததும் கடல் மட்டம் உயர்ந்ததுமே இதற்கு காரணம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

விஜயபாரதம்

# சட்டவிரோத தொலைபேசி இணைப்பகங்கள்



விஜயபாரதம்

கேரளாவில் எர்ணாகுளம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் 14 சட்டவிரோத தொலைபேசி இணைப்பகங்களை நடத்தப் பட்டு வந்ததை கேரள காவல்துறையினர் கண்டறிந்தனர். இது தொடர்பாக ஹக்கீம், இர்ஷாத், நிதின் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹவாலா ஆபரேட்டர்கள், தங்க கடத்தல்காரர்கள், பயங்கரவாதிகள் இதனை பயன்படுத்தி இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இந்த முறைகேடான தொலைபேசி இணைப்பகங்கள் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ உளவு அமைப்புடன் தகவல்களை பறிமாறி வந்ததை நமது உளவு அமைப்புகள் உறுதிப்படுத்தியுள்ளன. கடந்த மாதம் கோழிக்கோட்டில் இதே போன்றாதொரு சட்டவிரோத தொலைபேசி இணைப்பகம் கண்டறியப்பட்டது. அதற்கு முன்பாக பெங்களூருவில் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இவற்றில் ஈடுபட்ட கேரளாவை சேர்ந்த முஸ்லிம் பயங்கரவாதிகள் சிலர் கைது செய்யப்பட்டனர் என்பது நினைவுகூரத்தக்கது.


# முக்கிய நகரங்கள் வீழ்ந்தன

ஆகஸ்ட் இறுதிக்குள் அமெரிக்கா தனது படைகளை வாபஸ் பெறுவதாக அறிவித்ததை அடுத்து, ஆப்கானிஸ்தானின் வடக்குப் பகுதியில் பயங்கரவாதிகள் தங்கள் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளனர். டஜன் கணக்கான எல்லையோர மாவட்டங்கள் தலிபான்களின் கைகளில் சிக்கியுள்ளன. இதில் முக்கியமாக, வடக்கு ஆப்கானிஸ்தான், தெற்காசியாவில் உள்ள கனிம வளம் நிறைந்த மாகாணங்களின் நுழைவாயில் என கருதப்படும் குண்டூஸ் நகரம் தலிபான்களால் கைப்பற்றப்பட்டுள்ளது. இம்மாகாணம் தலைநகருடன் நேரடி சாலை இனைப்பைக் கொண்டுள்ளது. மேலும் இப்பகுதி வழியாகக் கடத்தப்படும் அபின் என்ற போதைப்பொருள் நடமாட்டம் தற்போது தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுள்ளது. இதைத்தவிர தாலோகான், ஷெபர்கானின், ஜரஞ்ச் உள்ளிட்ட பகுதிகள் பயங்கரவாதிகளின் பிடியில் அகப்பட்டுள்ளன. இவற்றை விரைவில் மீட்போம் என ராணுவம் தெரிவித்துள்ளன. ராணுவத்துக்கு உதவ பி52 குண்டுவீச்சு விமானங்கள், ஸ்பெக்டர் துப்பாக்கிகளை தாங்கிய அமெரிக்க விமானங்களும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளன. அமெரிக்கத் தாக்குதலில் 200க்கும் மேற்பட்ட தலிபான்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

விஜயபாரதம்



# கிரேக்க எழுத்துக்கள் போதாது




விஜயபாரதம்

சீனாவில் இருந்து பரவிய கொரோனா வைரஸ், படிப்படியாக உருமாற்றம், அடைந்து வருகிறது. இந்த மாறுபாடுகளுக்கு ஆல்பா, பீட்டா, காமா, டெல்டா, ஈட்டா என கிரேக்க எழுத்துக்களைக் கொண்டு பெயர்கள் சூட்டப்பட்டு வருகிறது. கிரேக்க எழுத்து வரிசையில் மொத்தமே 24 எழுத்துக்கள் உள்ளன. ஆனால் கொரோன வைரசோ தொடர்ந்து மாறுபாடு அடைந்து வருகிறது. என்வே, இந்த எழுத்துக்களுக்குப் பிறகும் பெயர்கள் தேவைப்படும் என மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். அதனால், மாறுபாடுகளை அடையாளப்படுத்த நட்சத்திரக் கூட்டங்களின் பெயர், கிரேக்க கடவுள்கள், பெண் தெய்வங்களின் பெயர்களையும் சூட்ட ஆலோசித்து வருவதாக உலக சுகாதார அமைப்பின் கோவிட் தொழில்நுட்பக்குழு தலைவர் மரியா வான் கெர்கோவ் தெரிவித்துள்ளார்.

---

# வலையில் சிக்கிய மீம்கள்




அப்பா
அடேய் என்னடா Online class_னு சொல்லிட்டு Game விளையாடிட்டு இருக்க!??
மகன்
PT பீரியடு ப்பா...


சோத்துக்கே சுண்ணாம்பு அடிக்கிறப்போ 3,000 கோடி செலவுல பட்டேலுக்கு சிலை தேவையான்னு கேட்ட உன் புத்திக்கு...
இவ்வளவு கடன வச்சிக்கிட்டு 2,500 கோடி செலவுல பூங்கா தேவையா அப்படின்னு கேக்க தோணல பாத்தியா...!!!






அன்று: நிதியமைச்சர் பணி எனக்கு மிக மிக சுலபமான பணி! ஒரே இரவில் வரி இல்லாத பட்ஜெட் தயாரித்து விடுவேன்! - நிதியமைச்சர் பி.டி.ஆர்

இன்று: வரியே வசூலிக்காவிட்டால் எப்படி ஆட்சி நடத்த முடியும்? ஜீரோ வரி பெட்ஜெட் என்பது அர்த்தமற்றது.

# கே.பி.கோபாலராவ்




விஜயபாரதம்

நேற்று காலை நமது சென்னை மாநகரில் கே .பி கோபாலராவ் என்கிற முன்னாள் கப்பற்படை தளபதி காலமானார். யார் இவர்?

கமாண்டர் காசர்கோட் பட்டணசேத்தி கோபால் ராவ் மங்களூருவில் பிறந்தார், 21 ஏப்ரல் 1950ல் பாரத கப்பற்படையில் இணைந்தார். வருடம் 1972 நமது பாரத நாடு, வங்கதேசம் எனும் பாகிஸ்தானின் இரண்டாம் உறுப்பாக இருந்த நிலப்பரப்பரப்பை பிரிந்து எடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட காலம் அது.

பாரதம் இரு முனைகளில் போர் நடத்திக் கொண்டு இருந்தது. அப்போது நமக்கு தேவை ஒரு சிறிய அளவிலான அதிரடித் தாக்குதல். எதிரியை மனதளவிலும் ராணுவ ரீதியிலும் நிலைகுலைய செய்யும் வேலை. அதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கு கராச்சித் துறைமுகம். ஏனெனில், பாகிஸ்தான் நாட்டின் ஒரே பெரிய துறைமுகம், அந்த நாட்டின் வாசல், பொருளாதார நகரம் என எல்லாமாக இருந்தது அது. அதனை தாக்கி அழித்தால் அவர்களால் கிழக்குப் பகுதியில் இருந்து நமது கல்கத்தாவை தாக்க முடியாது.

அன்றைய பாரத கப்பற்படை தலைவர் அட்மிரல் எஸ். எம் நந்தா, கோபால் ராவை அழைத்து 'ஆப்பரேஷன் டிரைடண்ட்' என்ற ரகசிய ஆப்பரேஷனை நடத்தும் பொறுப்பை ஒப்படைத்தார். கோபால் ராவ், ஆர்னாலா வகை போர் கப்பல்கள் ஐஎன்எஸ் கில்டான், ஐஎன்எஸ் கட்சல் ஆகியவற்றின் தளபதியாக பொறுப்பேற்று 04 டிசம்பர் 1971ல் சிறிய அளவிலான ஒரு குழுவை தலைமை ஏற்று கராச்சி சென்று துறைமுகத்தைத் தாக்கினார். இரண்டு பாகிஸ்தானிய பிஎன்எஸ் கைபர், பிஎன்எஸ் ஷாஜஹான் என்ற போர் கப்பல்கள், பிஎன்எஸ் முஹாபிஸ் என்ற கன்னிவாரிக் கப்பல், ஒரு சரக்குக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. எண்ணெய் கிடங்குகள் அழிக்கப்பட்டன.

நாம் பெற்ற போர் வெற்றிக்கு கராச்சி துறைமுக தாக்குதலும் முக்கிய பங்கு வகித்தது. பாகிஸ்தானில் இருந்து கடல் மார்கமாக துருப்புகள், ஆயுதங்கள் வர வழியில்லாமல் செய்யப்பட்டது. இதனால், பல்லாயிரம் பாகிஸ்தான் வீரர்கள் பாரதத்திடம் சரண் அடைந்தனர்.

நமது எதிரி நாட்டை அடித்து நொறுக்கிய மாவீரர் கோபால ராவ். மத்திய அரசு, மிக உயரிய ராணுவ விருதான 'மஹா வீர் சக்ர' விருதை முதல் முறையாக ஒரு கப்பற்படை வீரருக்கு வழங்கி கௌரவித்தது.